DR U.V. SWAMINATHA IYER LIBRARY
MAHAMAHOPADHYAYA
TIRUVANMIYUR
MADRAS 41

உ

சிவமயம்.

# எறிபத்தநாயனார்

## சரித்திரக் கீர்த்தனை.

இஃது

யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி மகாவித்வான்

நா. கதிரைவேற் பிள்ளையவர்கள்

விருப்பத்திற்கிணங்க

கருவூரிலிருக்கும்

கோயம்பள்ளி சுப்பிரமணியய்யர் குமாரர்

மகா-ா-ா-ஸ்ரீ வெங்கடசுப்பையரவர்கள்

இயற்றியதை

கருவூர் சைவமதபரிபாலன திருஞானசம்பந்த நிலயம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ கந்தசாமித்தம்பிரான் சுவாமிகளவர்களால்

கருவூர் "விவேகபாநு அச்சியந்திரசாலையிற்"

பதிப்பிக்கப்பட்டது.

1923.

# சாத்துக்கவிகள்.

இ,ஃது
கோயமுத்தூர் வித்வான்
**கந்தசாமி முதலியாரவர்கள் குமாரர் வக்கீல்**
மகா-ள-ள-ஸ்ரீ
**C. K. சுப்பிரமணிய முதலியார் B. A.,**
அவர்களாலியற்றிய
அறுசீர்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

சிவனடியார்க் கிடர்செய்வார் தமைத்தடிந்த வெறிபத்தர்
செய்ய காதை,
யுவகைதருங் கீர்த்தனமா யுரைத்தழியாப் புகழ்பெற்று
ணுருங் கீர்த்தித்,
தவநிறையுங் கருவூர்வாழ் மாமறையோன் செவிக்கினிமை
தகவாச் செய்தான்
கவனமுறு வேங்கடசுப் பையரெனும் பெயரோங்கு
கவிவல்லோனே.

---

காங்கயம் அஷ்டாவதானம் V. சேஷாசல நாயுடு
அவர்கள் இயற்றியது.
விருத்தம்.

சங்கீத சாகித்யத் துறையுணர்வோன் கண்ணப்பர்
சரிதந்தன்னை
அங்கீதத் தாலுரைத்த வருட்பிரகாசப்புலவ
ர் யாரும்

இங்கிதல்லாதுபதி யேதுநமக் கெனுங்கருவை
யிசைந்து வாழ்வு
தங்கித லிணைகரத்தான் மறையவர் குலோத்துங்கன்
சத்ய வாக்யன் (1)
புங்கமிகு கவுண்டினிய கோத்திரச் சுப்பிரமணிய
புனிதன் செல்வன்
தங்கு மெங்கள் வேங்கிடசுப்புப் பேர்கொள் தமிழ்ச்சிங்கம்
தகவினுய்ந்து
பங்கமிலாத் திருத்தொண்டர் புராண சரிதத்திலெறி
பத்தர் சீர்த்தி
பொங்குமியலிசையாகப் புனைந்துரைத்தான் செவிக்கமுதாய்ப்
புகல்வதாமே. (2)

---

தரங்கம்பாடியைச்சார்ந்த பிறையாறு மகா-ள-ளஸ்ரீ
நா. பெ. இராமச்சந்திரநாயுடு அவர்கள் இயற்றியது
அறுசீர்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

---

நத்தாருங் கடற்புவியி லெறிபத்தர் சரிதையை நாமகளுங் கான
வித்தாரு நாரதனும் வாணனுஞ்சே டனுங்கூடி வியக்கச் செய்தான்
சத்தாருங் கீர்த்தனையா மறையவர்தங் குலக்கருவைத் தலத்துவாழுங்
கொத்தாருமணியுரத்து வேங்கிடசுப்பையனெனுங் குணவான்மாதோ

---


வீராகூமிமங்கலம் மகாவித்வான்
மகா ள-ஸ்ரீ கந்தசாமிக்கவிராயர் அவர்கள் மாணாக்கர்
குறிச்சி கம்பளியம்பட்டி
மகா-ள-ள-ஸ்ரீ முத்துசாமிக்கவுண்டரவர்களியற்றியது.
அறுசீர்கழி நெடிலடி ஆசிரியவிருத்தம்.

மருவூர்தா மரையிறையு மாதவனுந்
தேடரிய மங்கைபாக
மருவூர்நன் னரையிறையு மனமுருகு
மெறிபத்தர் மருவுங்காதை
கருவூர்செம் மறையுணரும் வேங்கடசுப் பையனெனுங்
கனவான் சென்மக்
கருவூர்சேன் னெறிமறியக் காசினியிற்
கீதமதாய்க் கழறினனே.

---

திருநெல்வேலி ஜில்லா சிவகங்கை சமஸ்தானம்
இராயகிரி
மகா-ள-ஸ்ரீ அருணாசலக் கவிராயரவர்களியற்றியது.
அறுசீர்கழிநெடிலடிஆசிரிய விருத்தம்

ஈரெட்டுக் கலைமதிபோ னிலகுமுக வசிகரமு
மிறுகக் கட்டும்
வாரெட்டுங் கனதனத்தாண் மருவுமிடப் பாகனுமே
மயங்கச் செய்தான்
காரெட்டுங் கருணையெறி பத்தர்புகழ் கீதமதாய்க்
கருவூர் வாழும்
பாரெட்டுந் திசைபரவும் வேங்கடசுப் பையனெனும்
பாவலோனே.



ஸ்ரீ திருஞானசம்பந்தர்.

உ

## முகவுரை.

ஐயன்மீர் யான் கல்லாதானாயினும் கசடறக் கற்ற செந்நாப்புலவர் பல்லோரது நட்பினானும் அன்னவரது கல்வி கேள்வியின் மிகுதியானும், ஆன்ம கோடிகளுக்காக்கும் ஆதிநாதனது பேரருளினானும், ஒழிவுறுங் காலங்களிற் சிவனடியார்களது சரிதங்களிற் சில கீர்த்தனங் கூறியும், சிவபெருமான்மீது பதங்கள் பாடியும் வருமென்னை யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி மகாவித்வான் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் மேற்கூறியகீர்த்தனங்களைக்கேட்டுவந்து தம்மூர்உபய கதிர்காமத் தலபுராணத்தைக் கீர்த்தனங் கூறும்படி கேட்டவண்ணங்கூறி முடித்துக் கொடுத்த பின்னர் இத்திருத்தொண்டர் புராணத்தையுங் கீர்த்தனங் கூறவேண்டுமென வற்புறுத்தினமையின் அவரது திருவாக்கைச் சிரமேற்கொடு இவ்வெறிபத்தநாயனாரது திவ்விய சரிதங் கீர்த்தனமாய்கூறி முடித்துக்கொடுக்கலாயினேன்

எனினும், கல்லாதாருரைக்குங் கவிதையிற் சொற்குற்றம் பொருட் குற்றமுண்டாவ தியற்கை யென்பதனை ஆன்றோரிகழாது ஆதரிப்ப தன்னவர் பெருமைக்கோரணிகலமாக் கொண்டொழுகுதலினால் யானுமக்கல்லாதாரி லொருவனாதலி னெனது கவிதையிலுறுங் குற்றங்களனைத்தினையும் பொறுத்தாதரித்தற்கா யிங்ஙனம் வந்தனந் தந்தனன்.

இப்படிக்கு,

சு. வே.

௨

## திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருக்கருவூர்த் திருவானிலைத் தேவாரப்பதிகம்

பண்—இத்தளம்

தொண்டெலாமலர் தூவி யேத்தநஞ் - சுண்ட லாருயி ராய தன்மையர்
கண்டனார்கருவூரு ளானிலை - யண்டனாரரு ளீயு மன்பரே.
நீதியார்நினைந்தாய நான்மறை யோதி யாரொடுங் கூடவார்குழைக்
காதினார்கரு வூருளானிலை - யாதி யாரடி யார்த மன்பரே.
விண்ணுலாமதி சூடி வேதமே - பண்ணுளார்பர மாய பண்பினர்
கண்ணுளார் கருவூருளானிலை - யண்ணலா ரடியார்க்கு நல்லரே
முடியர் மும்மத யானை யீருரி - பொடியர் பூங்கணைவேளைச் செற்றவர்
கடியுளார் கருவூரு ளானிலை - யடிகள் யாவையு மாய வீசரே.
பங்கயம்மலர்ப் பாதர் பாதியோர் - மங்கையர்மணிநீல கண்டர்வான்
கங்கையார் கருவூருளானிலை - யங்கை யாடவாத் தெம்மண்ணலே.
தேவர் திங்களும் பாம்புஞ்சென்னியின் - மேவர் மும்மதி லெய்த
காவலர் கருவூரு ளானிலை-மூவராகிய மொய்ம்ப ரல்லரே. [வில்லியர்
பண்ணினார்படியேற்றர் நீற்றர்மெய்ப் பெண்ணினார்பிறை தாங்கு நெற்
கண்ணினார் கருவூரு ளானிலை-நண்ணினார்நமை யாளு நாதரே [றியார்
கடுத்தவாளரக்கன் கயிலையை - யெடுத்த வன்றலை தோளுந் தாளினா
லடர்த்தவன் கருவூரு ளானிலை-கொடுத்தவன்னருள் கூத்த னல்லனே
உழுது மாநிலக் தேன மாகிமா- லுழுது மாமல ரோனுங் காண்கிலர்
கழுதினான் கருவூரு ளானிலை - முழுது மாகிய மூர்த்திபாதமே
புத்தர் புன்சமணாதர் பொய்யுரைப்- பித்தர் பேசிய பேச்சை விட்டு
பத்தர்சேர் கருவூரு ளானிலை-யத்தர் பாதமடைந்து வாழ்மினே[மெய்ப்
கந்தமார் பொழிற் காழி ஞானசம் - பந்தன் சேர்கருவூரு ளானிலை
எந்தையைச்சொன்ன பத்தும் வல்லவர் - சிந்தையிற் றுயராய தீர்வரே

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

# எறிபத்த நாயனார் சரித்திரக் கீர்த்தனை.

## விநாயகர் துதி.

(இசைநடைக் கண்ணி)

திருவாநிலையுறு பசுபதி தேவன்றிருவடிசேர்
பெருவாளெறிபத்தர் சரிதையைப் பேசுவதற்கே.
குருவாகிய நால்வாயொற்றைக் கொம்பானையின் முகத்தோன்
இருமாமரை மலர்த்தாளிணை யேத்திப்பணிவேனே.

கீர்த்தனம்.

இராகம்-நாட்டை, தாளம் ஆதி.

பல்லவி.

விநாயகா சரணம் கஜானன

அநுபல்லவி.

அநாதரக்ஷக ஆபத்பாந்தவ
அருணகோடிதே ஜோன்மய சின்மய (விநா)

சரணம்.

மூலாதாரமூஷிகவாகன மோதகப்பிரியநாதா
நாலாகியமறை போற்றிய பாதா
நற்கருவூராநிலை வந்தசுந்தர (விநா)

## கலைமகள் துதி.

(இ-ந-க)

பங்கேருகன் மனையாள் வெளைப்பணியாள் வெள்ளையுடையாள்
செங்காந்தளினிறச் சேவடி சென்னிக்கணிவேனே.

கீர்த்தனம்

இ-ம் சுருட்டி, தாளம் சாப்பு.

பல்லவி.

கலைவாணீபுனதிணைமலர்க் கழல்வணங்கினேன்

அநுபல்லவி.

சலியாதேபாடுந்திறமை தர்னெனக்களிப்பாயே
வெள்ளைக் (கலை)

சரணம்.

உள்ளத்தைக்கொண்டுண்டுறங்கி ஓங்காரப் பிரணவத்தின்
வள்ளலென்னும் பசுபதியை மனநினையாதிருந்தேன்
கள்ளனென்றுகைவிடாது காப்பாயருள் புப்பாய்
வெள்ளையாடையுடுத்தாயே வேண்டியவரந்தருவாயே.(கலை)

---

## நால்வர் துதி.

(இ - ந - க.)

சீகாழியன் வாகீசன் மெய்திகழ் சுந்தரன்முதலாம்
பாகார்மொழிதிருத் தொண்டர்கள் பதமென்றலைக்கணியே

கீர்த்தனம்.

இ-ம் சங்கராபரணம், தாளம் ஆதி.

பல்லவி.

நால்வர்பதமலரே யெந்நாளும் துதிப்பீரே

அநுபல்லவி.

மால்வராது மதர்வேல்விழி மாதர்மையல்புகுத்திடாது
காலும்வெஞ்சமக்கடவுள்பாசம் கட்டிடாது முட்டிடாது. (நா)

சரணம்.

இருவினைவாராமலோட்டும் ஈசனன்புமனநாட்டும்
பரிவோடு முத்திவழிகாட்டும் பசுபதிமலரடியிற் கூட்டும். (நா)

## சபாபதி துதி.

(இ - ந - க.)

அலகைக்கெனவுந்தூக்கிய வானந்த நடேசன்
இலகுந்திரு மலர்ப்பாதங்க ளேத்தாதவ ரெவரே.

கீர்த்தனம்.

இ-ம் இந்துஸ்தானி, தாளம் சாப்பு.

பல்லவி.

சபாபதியே சகதலாதிபதியே

அநுபல்லவி

கபாலய்ய கிருபாநிதியே காக்கக்கடனே யெந்தாயே (சபா)

சரணம்.

அம்பலத்தாடிய பாதம் பணியா நாயினேன்
உம்பரும்புகழுன் பெருமை யோதிடாத வாயினேன்
சம்பரனைச் செற்றவனைத் தடித்தவனே பெருந்தவனே
நம்பினேனுன் பாதமலரை நற்கருவூர் வாழ்பவனே (சபா)

---

## முருகர் துதி.

(இ. ந. க.)

மஞ்சேயெனுங்குழலாள் வள்ளிமகிழ்நன் அரிமருகன்
செஞ்சேவடிகளை நாளுமென் சிரத்தே யணிவேனே

கீர்த்தனம்.

இ-ம் காம்போதி, தாளம் சாப்பு.

பல்லவி.

ஆறுமுகா பன்னிரு கையா

அநுபல்லவி.

சூரனைந்தடிந்த சுந்தரமெய்யா

சரணம்.

காளையேறுங் கண்ணுதற்குப் பாலனே கன்னிவள்ளிக்குத்
தோளணையுஞ் சோதியே துய்யகருவூர் வாசியே. (ஆறு)

## அலங்காரவல்லி சவுந்தரநாயகி துதி.

(இ. ந. க.)

அழகென்ப தோருருவாகிய வம்மானிருதாளும்
புழுகுங்கமழலங் காரியின் பொற்றாமரைத் தாளும்
வழுவின்றி யெந்நாளுஞ்சிர மணிவோர்க்கிரு வினைதான்
வருமென்று சொல்வாரும் மிந்த மகிமீதினி லுளரோ.

கீர்த்தனம்.

இ-ம் கல்யாணி, தாளம் சாப்பு.

பல்லவி.

நம்பினேனே யேழைநானே வுங்கள்சீரடி

அநுபல்லவி.

தும்புருநாரதாதியர் போற்றும்
சுந்தரியலங்காரவல்லி யுங்கள்பாதம் (நம்)

சரணம்.

பாடத்தெரிந்தவனோ பகவதி யுங்களைக்கொண்
டாடத்தெரிந்தவனோ அருமறை முடிவினில்
தேடத்தெரிந்திடாத திகழொளிகாண் நிதம்
நாடித்திரியுமெனை நாடிவரந்தா. (நம்)

## திருநந்திதேவர் துதி.

(இ. ந. க.)

மழுவேந்திய வானோன்பதம் மாறாது சுமக்கும்
வழுவாதவெள் ளேற்றின்பத மலர்கண்மற வேனே.

கீர்த்தனம்.

இ-ம் கேதாரகௌளம் தாளம், ஆதி.

பல்லவி.

வந்தித்தே னந்திதேவா வுன்பதமலரை

அநுபல்லவி.

சிந்தித்தேன் பந்தவினை தீர்ப்பாய்
காப்பாய் செழுஞ்சுடரே (வந்)

சரணம்.

ஆரணனீ நாரணனீ யாநிலையீசற் கானவனீ
பூரணனீ பூசுரனீ புகலுங்கருவூர் வாசனுனீ. (வந்)

---

## தலமகிமை.

(இ. ந. க.)

கொங்கேழ் சிவதலஞ் சொல்பவர் குறிப்பார்முதற் கருவூர்
எங்கோன் பசுபதி வாழ்ந்திடும் இவ்வாநிலைதனையே.
பங்கேருகன் முதலாயினர் பணியுந்தலமெனலால்
எங்கும்புகழ்தல மற்றைய தெதுவென்று சொல்வேனே.

கீர்த்தனம்.

இராகம், பியாக்கடை. தாளம், சாப்பு.

பல்லவி.

ஆநிலைத்தலம்போலே யிந்த அகிலத்திலுண்டோமேலே.

அநுபல்லவி.

மாநிலம் புகழ்ந்தேத்துந் தலம்
மறையவர்தினம் வாழ்த்துந் தலம்
வானுறைபவர் வணங்குந் தலம்
மறை[illegible]வினில் வயங்குந் தலம் (ஆநி)

சரணம்.

ஒருதரங் கருவூரென்பவர்க் குற்றிடாது பாசபந்தம்
இருவினைகளைத் தீர்ப்பதற்கு மேற்றதெவர்க்குஞ் சொந்தம்
வரும்வரும் யுகங்களிலழியா வாழ்வுடையது மாண்புடையது
நிரதமும் சிவசாம்பிராஜ்ஜியம் நேர்ந்தளிப்பது சார்ந்திருப்பது()

## மூர்த்தி விசேடம்.

(இ. ந. க.)

இடர்தீர்ப்பவனடியார்களுக் கெம்மான் சிவ பெம்மான்
விடையான்புலி யுடையான்பெரு வினையேற்கரு ளுடையான்
மடைவாய்வருகடலோ வெனவருநறைமலர்த்தொடையான்
சுடர்ம[illegible]ணிமுடியானன்பர் தொழுதேத்துஞ்சேவடியான்
வானுடை[illegible] மண்ணுடரும் மகிழ்ந்தே யனுதினமும்
தாளுடுமாநிலமூர்த்தியின் சரிமூர்த்தியெங்குளவே.

கீர்த்தனம்.

இராகம், காம்போதி. தாளம், ஆதி.

பல்லவி.

பசுபதி மூர்த்திபோலப் பாரினிலொருமூர்த்தி
படைத்ததோ விந்தக்கீர்த்தி.

அநுபல்லவி.

சசிதரமூர்த்தியவர் சங்காரமூர்த்தியவர்
விசிகந்தொடுக்க மகமேருவளைத்தவர். (பசு)

சரணம்.

ஆதியாய் நடுவுமாய் முடிவுமாயிருப்பவர்
அண்டகோடிகளெல்லாம் அன்னையாய்ப்படைப்
சோதியாய் விளங்கிடும் தூய்யவர்மெய்யவர் [பவர்
சொல்லுங்கருவூராநிலை நிலைக்[illegible]ப்பவர். (பசு)

## தீர்த்தவிசேடம்.

(இ. ந. க.)

மேனுடி மிவருகங்கையின் மேம்பட்டிடப்புனிதம்
தானேசெயும் பலதீர்த்தமத் தலத்தன்றியெங்குளதே.

---

## அவையடக்கம்.

(இ. ந, க.)

பூமேலவன் படைப்புக்கெதிர் புகல்கின்ற குலாலன்
தாமேபடைத்திடும் பெறியது சாராதது போலே.
வானேயெனுந்தமிழின் கடல் மகிழ்ந்துண்டவர்களின் முன்
நானேசொலப் புகுந்தேனிதை நன்றென்றுகொள்வாரோ

கீர்த்தனம்.

இராகம், கானடா. தாளம், சாப்பு.

பல்லவி.

பொறுப்பீரே யென்பிழையை
புலவரெனும் பெரியவரே.

அநுபல்லவி.

மறப்பீரோ உங்கள்சிறு மைந்தர்சொலு
மழலைச்சொல்லை (பொறு)

சரணங்கள்.

ஏடறியேன் எழுத்தறியேன் இலக்கணவிலக்கிய மறியேன்
பாடும்வழிபகர்ந்தறியேன் பதமறியேன் விதமறியேன். (பொ)
கற்காதானயினும்யான் கருவூராநிலையீசன்
பொற்பாதமடைந்ததொண்டர் பூஞ்சரிதம்புகலுற்றேன் ( )

MAHAMAHOPADHYAYA
... NATHA IYER LIBRARY

## நாட்டுச்சிறப்பு.

(இ. ந. க.)

ஷை வேறு.

மாதந்தோறும்மும்மாரி வழங்கும் விளைவோபெருவாரி
காதும்வறுமையை யறியாதே களிக்குங்கொங்கெனும் வளநாடே

கீர்த்தனம்.

இராகம், தோடி. தாளம், ஆதி.

பல்லவி.

எங்குநாடிறுமிக்கக் கொங்குநாடுபோலவளம்
தங்குநாடு கண்டபேருண்டோ.

அநுபல்லவி.

அங்கநாடுவங்கநாடு அந்தமாங்கலிங்கநாடு
துங்கநாடு தங்கநாடு சோழசேர பாண்டிநாடு. (எங்)

சரணங்கள்.

விளைவிற்குறை வில்லாநாடு வேண்டியபொருள் கிடைக்குநாடு
தலைவிற்சிறந்து விளங்குநாடு சத்தியந் தப்பாதநாடு. (எங்கு)
கொலைகளவுபொய் யில்லாநாடு கூரறிவோ ருறையுநாடு
கலகமின்றி வயங்குநாடு கருணைமாரி பொழியுநாடு. (எங்கு)

## நகரச்சிறப்பு.

(இ. ந. க.)

அந்நாட்டிற் கொருதிலதம்போல் ஆநிலையென்னுங் கருவூராய்
மன்னும்நகரத்தின்வளமை மகிழவுரைத்தற்கென்வசமோ

கீர்த்தனம்.

இராகம், அடாணா. தாளம், ரூபகம்.

பல்லவி.

கருவூர் நகர்போலே இந்தக் காசினியிலுண்டோ மேலே

அநுபல்லவி.

பெரும்பேறுள தானதினாலே
பேசப்புகுந்தனன் மாசற்றொருக்காலே. (கரு)

சரணம்.

வானமளாவும்கோபுரங்கள் மேருமாமலை யன்னகொத்தளங்கள்
பானத்தும்வெண்சுவர்த்தலங்கள் விரிபாதலஞ்சேரகழ்க்குழிகள்
பூநக்தும்கோயில்கள் பொன்னத்தும் வாயில்கள்
போசனச்சாலைகள் வாசனச்சோலைகள்
வானத்துறுதவளங்கள் நிறைந்து வயங்கும்பெருநகர்
எங்கும் புகழ்நகர். (கரு)

மன்னுமறையவர்தெருக்கள் பல மன்னருறைகின்ற
தெருக்கள்
துன்னும்பூவைசியர் தெருக்கள் மற்றும் சொல்லும்
வருணத்தார் தெருக்கள்
அன்னநடை மின்னாரசியர் தெருக்கள் அல்குல்
விற்கும்பொன்னனையவர் தெருக்கள்
இன்னம்சொலப்புகின் எத்தனை தெருக்கள்
எண்ணிக்கைசொல்பவர் மண்ணுக்குள்ளேயெவர்.

சங்கரவென்பவர் பலபேர் சிவ சம்போவென்
றார்ப்பவர் பலபேர்
திங்கள்சூடியெனப் பலபேர் துதி செய்துமகிழ்பவர்
பலபேர்
செங்கையின்மான் மழுவுந்தரித்தோய் எனச்
செப்பித்துதிப்பதில் முற்படுவார்பலர்
அங்கயற்கண்ணி யலங்காரவல்லியோ
டாடும்பரனே யென்றாடிடுவார்பலர். (கரு)

( இ. ந. க. )

அக்கோலக்கைலைக்கோவே இக்கோவென்றாப்பதுபோல்
அக்கோவென்று குயிற்கூடி மிக்கானந்தமுறக்கூவும்
மாஞ்சோலையும்வளர் பூஞ்சோலை மகரந்தம்பரவுஞ்சோலை
தேஞ்சோலையும் தென்னஞ்சோலை திகழுந்தீங்கமுகஞ்சோலை
முப்போகம்விளையும் செந்நெல் மூரித்தண்டேந்திய க்கன்னல்
எப்பாரும் புகழுங்கருவூர் எழினகர்தன்னி லிருப்பவரில்
ஈயாதவரே யிலையென்றால் இல்லாதவரெவரென்றிடுவேன்
செய்யாதவரிலை சிவனடிமை சேராதவரிலை யவனடியை.

---

ஷை வேறு.

அரசியல்.

இம்மாண்புடை யெங்கோன் பசுபதிவாழ் கருவூரைச்
செம்மாண்பொடு செங்கோல் செலுத்திடுவான் புகழ்ச்சோழன்
கைம்மா வுரிபோர்த்தான் கழல்கணமாயினு மறவான் [ன்
செய்மாண் புளதொண்டர்களிற் சிறந்தோன் மிகத்தெளிந்தோ
உறையூருறைபவன் பற்றலர்க்கொரு கோளரியனையான்
குறைவில் நிதியுடையான் தயையுடையான் தருகொடையான்
குடநாட்டவர் கொணருந் திறைகொளவேண்டியே கருவூர்
தடமா நகர்வந்தான் பெருந்தானை புடைசூழ
நதிவேணியின் பிறைசூடிய நாதன் பசுபதிவாழ்
புதுவாலயம் புகுந்தான் சரண்புரிந்தான் இலம்புகுந்தான்
மனுநீதியின்படியே முறை பிறழாதுதன் வளநா
டனைவோர்களும் புகழும்படி யரசாண்டிடுநாளில்.

## சரிதை.

கீர்த்தனம்.

இராகம், கேதாரகௌளம். தாளம், சாப்பு.

பல்லவி.

எறிபத்தரென்றொரு பெரியவர் இருந்தார் கருவூரில்

அநுபல்லவி.

கறைபற்றிய சண்டற்கடியவர்கட் கிடர்புரிவோர்
முறைதப்பிய ரெனவேயவர் முடிவீழ்த்திடும் வடிவாளினர் (எ)

சரணம்.

அறம்பிறழாதவர் பசுபதி யடிமலர்களை நிதமும்
குறைவின்றியே மனக்கோயிலிற் குடிவைத்தவர் சகமும்
நிறைமும்மலப் பெருவாரிதி நில்லாதவர் பரத்தின்
கரைகண்டவர் கறைகண்டனின் கழல்கண்டவர்க் கருந்
தொண்டவர். (எறி)

(இ. ந. க.)

சொல்லரிதாஞ் சிவபத்தருளே தூயவர்மெய்யவர் பொய்யு
நல்லவராமெறி பத்தருறை நன்னகர்கரு வூராநிலையில் [றையா
மாமறையவர் குலத்தினிலுதித்தோன் மறைநான்கும் மாசறப்
[ படித்தோன்
சாமமறைப்பண்பாடுவதில் தக்கோன் தக்கோன் மிக்கோனே
ஆகியமாதவன் சிவகாமியாண்டா ரென்றிடு மந்தணனே
போகியு மயனரிமுதலோரும் புகழுஞ் சைவத்தவமுதியோன்.

கீர்த்தனம்.

இராகம் தோடி, தாளம், சாப்பு.

பல்லவி.

சிவகாமியாண்டாரெனச் செப்புமொருவ ரிருந்தார்.

அநுபல்லவி.

பவசாகரங் கடந்தவராவர்
பசுபதிமலரடி நினைந்தவர். (சிவ)

சரணம்.

மாசிலாதமனத்தவர் மெய்யில் மருவுவெண்ணீ றிடுத்தவர்
ஏசிலாத வக்கமாலை யெத்தனையோ தரித்தவர்
பூசனைக்காமலர் பறிக்கும் பூங்குடலைகை பிடித்தவர்
தேசுலாஞ்சடலத்தவர் நாளுஞ் செப்பும்பெரும்புகழ் மிக்கப்
[படைத்தவர். (சிவ)

விருத்தம்.

நாதமடுக்குங் கடற்பள்ளி நளினமலரோன் முதலாய
வாதமடக்கித் தவம்புரியு மண்ணோர் விண்ணோர்நிதம்பணியும்
போதமடுக்கு மாநிலைவாழ் புலவராற்றுச் செஞ்சடையோன்
பாதமலர்க்குப் பூமாலை பரிவிற்சூடும் பெரியோனே.

---

(இ. ந. க.)

ஆறேறுஞ் சடைமுடியானார் அழலேறும் முக்கட்பானார்
நீறேறுந் திருமேனியனார் நெடுமால் விடையேறுஞ்சிவனார்.
பொற்பாதங்களிற் பூந்தொடையல் புரிந்தணிவிக்கதிடவைகறை
அற்புதவிற்பனர் சிவகாமியாண்டா ரெழுவார்நாடோறும் [யில்
சூதநதிப் படித்துறையேகிச் சொல்லுமுறைப்படியே மூழ்கி
ஆதபனொளி திகழ் சிவகாமி யாண்டார் திருவெண்ணீறணிந்து
காலைக்கட னங்கனமுடித்து கடிகமழ் பூங்குடலைகள் துடைத்து
கோலைநுழைத்துத்தோளெடுத்து குறித்திடுநந்தனவனமடுத்து

---

புட்பவிதி. கீர்த்தனம்.

இராகம், தேசிகதோடி. தாளம், ஆதி.

பல்லவி.

பூசனைக்காகாமலரே புகலக்கேண்மினே.

அநுபல்லவி.

நாசியினன் மூகந்தமலர் நள்ளிருளிற் பறித்தமலர்
நவிலுமெச்சில் தெரித்தமலர் நடக்குங்காலில் மிதித்தமலர்.

சரணங்கள்.

மழுவுடையான் றனக்கென்றே வைத்தநந்தவனத்துமலர்
மாண்புறுமுத்தமமலராம் வனத்துமாமலர்
பழித்திடுமத்திமமலராம் பாரிலுள்ளோர் தமக்குமலர்
பரிந்தணியவளர்த்தமலர் பகரிலதமமானமலர். (பூச)

எருக்கிலையாமணக்கிலையிலெடுத்தமலர் வெடித்தமலர்
எச்சம்பட்டமலர் சிலந்தியேறிச் சென்றமலர்கள்
முறுக்குளதாயினும்புடவை முடிந்தமலர் விழுந்தமலர்
முகிழ்த்திக்காம் பொதித்தமலர்மூழ்க நீரிலாழ்த்தியமலர் ()
உடல்கழுவாதெடுத்தமலர் உதிர்ந்தமலர் சிதைந்தமலர்
ஓங்குமரும்பிலெடுத்துபூத்து ஒளிகொண்மாமலர்
மடலவிழ்ந்துதேன்பருக வண்டுகிண்டிவந்தமலர்
வைத்துதலையிலெடுத்தமலர் மாசுறும்புழுக்கடித்தமலர் (பூச)

விருத்தம்.

இக்காலத்திம்மலரென் றியம்புகின்ற புட்பவிதியினிதறிந்தோர்
அக்காலத்தம்மமரல்லா தெடுப்பரோ யானே னறைதல்வேண்டும் - செக்கோலச் சடையார்க்கு மம்மையர்க்கும் விநாயகர்க்குஞ் சிரமாறுள்ள - வக்கோல வறுமுகர்க்கு மற்றை மற்றைத் தேவருக்கு மலர்கொய்தாரே.

கீர்த்தனம்.

இராகம், இந்துஸ்தானி காப்பி. தாளம், சாப்பு.

பல்லவி

அலர்பறித்தார் சிவகாமி யாண்டாரெனும் பெரியவரே.

அநுபல்லவி.

மலர்பறித்தார் பசுபதீசர் வனசமலரடியிற் சேர்க்க (அல)

சரணம்.

செங்கதிரோனெழுவதன்முன் செவ்வரிமதுநுகர்வதன்முன்
பங்கமிலா மற்றையோர் மலர்பறிப்பதற்குப் புறப்படுமுன் ()
துப்பமிருமல் கொட்டாவி சோர்வுகாட்டு நெட்டுயிர்ப்பு
அம்மலர்களிற் படாது அடக்கிவாயைத்துணியிற்கட்டி ()
(இ. ந. க.)

பறிக்கும்பறிக்கும் பன்மலர்கள் பரிவுடனேபெருங்குடலைகளில்
நிறைத்துநிறைத்தா நிலைகோயில் நேர்வாரோரிடத் தேயிடு
[வார்

மாசுறுமாமலர்களைநீக்கி மற்றுளமலர்களையேதக்கி
தேசுறுமன்பெனும் பூக்கொய்து திகழ்மணமெனுநாரிற்
[கோத்து

தொடுப்பவர்போலக்காமலரால் தொட்டுவகிர்ந்தநாரதனல்
தொடுப்பாரிண்டை தொடையலெனச் சொல்லும்பலபல
[வகைசெய்து

அறுகாலப்பூசனைகட்கும் ஆநிலைநாதற்கேயேற்கும்
சிறுகால்வண்டியிருந்தொடையல் செய்துகொடுத்தேவரு
[நாளில்

மாநிலமெல்லாம் கொண்டாடி மகிழ்நவராத்திரி யெனுந்திருநா
தானதுவந்திடப்புகழ்ச்சோழன் தன்னை காலங்கரித்தனரே. [ள்

கீர்த்தனம்.

இராகம், சஹானா. தாளம், சாபு.

பல்லவி.

பட்டணம் சிங்காரஞ் செய்தாரே திருவாநிலை

அநுபல்லவி.

அட்டதிக்கெலாமிவன்புகழ்பாட அந்தரத்தவர்வியந்துகொண்டாட
அட்டலக்குமிகளும்நடமாட ஆநிலைநாதனருளதுநீட

சரணம்.

மகரதோரணங்கள் நிறைநிறைகாட்டி
வாழைகமுகுகன்னல் வாயிலில்நாட்டி
சகமகிழும்புலிக் கொடிகளைநீட்டி
தமனியமேயென ஓவியந்தீட்டி (பட்)

(இ. ந. க.)

அவ்விந்திரன் நகரோ மலரமரந்தணனகரோ
மைவந்திடுதிருமேனியன் வாழ்கின்ற நன்னகரோ.

கைமேலொரு மானேந்திய கறைகண்டனன்னகரோ
எம்மானுடனே நட்டவனிருக்கின்றபொன்னகரோ.

என்றென்றுமேழுலகங்களு மெழில்கண்டுகொண்டாட
நன்றொன்றியதிருவாநிலை நகரான்புகழ்ச்சோழன்

அகிலம்புகழ் நவராத்திரியா மொவ்வொருநாளும்
மிகவும்புகழ்பெற வைபவம் விளைவித்திடுநாளில்.

நவமித்தினமே யெய்திட நகரத்தவ ரெல்லாம்
பவனித்தெரு வழிவந்தனர் பலபல்லியமொலிக்க

ஷை வேறு.

பட்டத் துற்றமதக்களிறைப்பாகர்கொணர்ந்தாம்பிரநதியில்
விட்டுத் துப்புறவேகழுவி விதவித மாயலங்கரித்து
பக்கத்திருவர்நின்றுவரப் பாகரிலிருவர் மேற்கொள்ள
மிக்கப்பெருமைம் மலைபோலே வீதியினிற்புறப்பட்டதுவே.

கீர்த்தனம்.

இராகம், கல்யாணி. தாளம், சாப்பு.

பல்லவி.

பட்டவர்த்தனம் புறப்பட்டது பாரீர்.

அநுபல்லவி

அட்டதிக்கயங்களலறியோட அந்தரத்தவர் வியந்துநாட
மட்டரும்புகழ்ச் சோழன்பெரும்புகழ்
மண்ணும் விண்ணும் உள்ளவரையிலும் நீட (பட்)

சரணம்.

வைக்குமடி யொவ்வொன்றுக்கு மாநிலம்வளைந்துநெழியுதே
மலையினும்பெரு வரைவந்ததெனை வளர்ந்துமிருக்குதே[மேரு
மைக்குலமுகில்பிழி படும்படி மழைக்கை தூக்குதே, பெரு
வாரிதியுடைந்து வந்ததுவோவென மதசலம்வருதே
கைக்கடங்காமல் பாகர்தத்தளிக்க
கண்டுநமனும் நடுங்கிப்போயொளிக்க
தைக்குமோசை யண்டஞ் செவியடைக்கத்
தண்ணளி யாநிலையப்பன் சந்தோஷிக்க (பட்ட)

---

(இ. ந. க.)

காதானூழிக்கால்வரவும் கண்ணுற்செந்தீப்பொறிதரவும் [துவே
தீதேதோ வருமென்றெவரும் திகைத்தோடத்தெருவந்த

பேரிமுழக்கங் குழலோசை பிடிசங்கார்வத்தோடவ்வூர்
வாரியலும்முலைமடவாரும் வருகும்பவனித்தெருவழியே.

சாமரைபோடத் தண்குடைநீழற் றங்கியேகரிபரித்தேரேறி
தாமரைமலர்க்கையிளங்குமரர்சதிராய்வருமத்தெருவழியே

மதவெற்பம்போல் மால்யானை மருண்டதுவென்னவெகுண்
கதைவாள்தண்டங்கொடுபாகர் கரிமத்தகமீதேமோதி[டோட

அடக்கமுயன்று மடங்காமல் அத்தெருவழியேவருங்காலை
மடக்கவிழ்ந்தமலர்கொய்து மறையோன்சென்றனன்தன்முன்
[னே

---

கீர்த்தனம்.

இராகம், சங்கராபரணம். தாளம், ஆதி.

பல்லவி.

வந்தார் சிவகாமியாண்டார்
மலரெடுத்துத்தே வாலயம்புக

அநுபல்லவி.

மந்தாரைகொன்றைமருவு மருக்கொழுந்
துந்தாமரைமகரந்தம்பெருகிய
குந்தம்விரிந்தசுகந்தராஜமும் செவ்
வந்தியும் கூவிளமுங் குருந்தங்கொண்டு (வ)

சரணம்.

தாதவிழ்மாதுளை சம்பகங்கல்லாரம்
போதவிழ் நீலம் பொலியசோகஞ்சூதம்
பாதரிபொன்னலரி செவ்வலரியோ
டேதமிலாமலரேந்திய தண்டொடு (வ)

( இ. ௩ க. )

குடலைக்கவிகையப்பூக்கொய்துக் கொண்டுமுன்செலுமம் [மறையோனைத்
தடங்கொள்புழைக்கையாற் பிடித்துத்தானக்கரிமலர்சிந்தியதே

விருத்தம்.

மறுமலர்க்குடலைச் சிதைந்திடப்பறித்து
மதகரியகலவுந்தொண்டர்
புதைபடுங்கண்ணாய்ப் பிறந்தவன் கைக்கோற்
போக்கிய போதவன்மனம்போற்
பதைபதைத்திட்டார் பாரினில்வீழ்ந்தார்
பண்ணுவதறிந்திலரானார்
மதியொருவாறுதேறினரெழுந்தார்
மான்மதயானைபின் சென்றார்.

தூக்கடா,

இராகம், கேதாரகௌளம். தாளம், ரூபகம்.

துடர்ந்தேகினாந்தத் துதிக்கையானையைப்பற்ற
அடர்ந்தேகினாந்தோ வந்தோ சிவனேயென்று (துட)

கீர்த்தனம்.

இராகம், சங்கராபரணம் தாளம், சாப்பு.

பல்லவி.

எங்குபோகிறாய் நானுனையேன் விடுவேன் மதகரியே

அநுபல்லவி.

திங்கள்சூடிக்காமலரைச் சிதறிஉதறியெறிந்து நீயே (எங்)

சரணம்.

சோழனிடத்துறு கொழுப்போ தொந்தரைசெய்வதில்விருப்
ஊழிக்காற்றுபோலநீயேன் ஓடுகிறாய் வாவா இப்போ [போ

ஏழைப்பார்ப்பான் வெறுங்கையனோ எண்ணிப்பாரோர் தண்டு
[ளனோ
தாழைமுள்ளுருக்கஞ்சமுயல்தானுமுண்டோவிடுவேனோ (எங்)

விருத்தம்.

கைகொண்ட வென்றண்டிற் கஞ்சியன்றோ கால்கடுக்க ஓடுகின்றாய் கனவயிற்றாய், பைகொண்ட மட்டிலுண்டு புகழ்ச்சோழற்குப் பகைகாணி லென்செய்வாய் பாவிநீயே, மைகுன்றமதுபோல உயர்ந்திருந்தும் மாமறையோன் றருமலரைச் சிந்தியேகல், செய்கின்ற வறங்களிலொன்றாய் நினைத்துச் செய்தாயோநின்னறிவு செப்பொணாதே.

கீர்த்தனம்.

இராகம், தோடி. தாளம், ஆதி.

பல்லவி.

புத்திகெட்ட மதகரியே போகாதேநில்லாய்

அநுபல்லவி.

சத்திகெட்டதோ அச்சந்தானோ உண்மையைச் சொல்லாய் ()

சரணம்.

வீரமில்லையோ யுனக்கு வேந்தனிட்ட கட்டளையோ
தூரவேகில் செய்தகுற்றந்தொலையுமென்று செல்கிறாயோ ()

விருத்தம்.

தடுக்கமுயலாதொரு கைம்பெண்டட்டிவளர்த்த தனயனென்ன
வெடுக்குமலரைநீ சிந்தியேகல் வழக்கோ விதுதகுமோ
தடுக்குமுயலுங் குரக்கினமே தூங்கும்பொழிலே யிருப்பிடமா
யடுக்குமுனக்கு மதன்குணமே யந்தோவந்ததறியேனே.

கீர்த்தனம்.

இராகம், சுருட்டி. தாளம், ஆதி.

பல்லவி.

எங்குஓடி ஒளிப்பேனை யேன் விடுவேன்மதகரியே

அநுபல்லவி.

சங்கரர்க்குத் தந்தமலர் தன்னைச் சிந்தியதாலே (எங்)

சரணம்.

வைகறையிலெழுந்து நிதம் மதுமலரைக் கொய்து கொய்து
பெய்குடலைகளைச் சிதைத்துப் பெருமையாக நீயித்தினம் (எ)

விருத்தம்.

அரசிலையோ அரசாணையிலையோ யன்பாரிலையோ ஊரிலையோ அடியேன்றந்த - பிரசமலர்க்குடலைகளைப் பாவியானை பிடுங்கியதற்கேதென்று பேசுவோர்கள் - புரசனரில் யாரேனுமிலையோ ஏழைபுலம்புமொழி யாவர்செவி புகுமிலலை - விரிசடையாய நிலையில் விளங்குகின்ற வெள்விடையா யென்னென்று விளம்புவேனே.

கீர்த்தனம்.

இராகம், தோடி. தாளம், ஆதி.

பல்லவி.

முறையிலையே கேள்வி முறையிலையே
முதுமறையவ னமுதூரிலுக் கொருமனு (முறை)

அநுபல்லவி.

கறைமிடற்றெந்தாய் கவனமொடிந்த
மறையவன்றந்த மலர்கரிசிந்த (முறை)

சரணம்.

இந்நாளறியேன் இடரென்பதையே
என்றோவின்றைக் கெதுவோதெரியேன் (முறை)

விருத்தம்.

சிகைதட்டி முடிந்திட்டு உடைவிசித்துத் திகழ்பஞ்சகச்சத்தை பிறக்கிக்கட்டிக் - தொகைபட்டவீரமெல்லாம் வாயாற்பேசிச் சொல்லாத சொல்லெல்லாம் சொல்லிக்கொண்டு - பகைபட்ட பேரைக்கண்டோடுமெங்கள்பார்ப்பார்போல் வெறுங்கையனே பாராயென்று - மிகைபட்டமதவானை பின்னேயோடிமெலிவுற்றுமத்தொண்டர் கலிவுற்றாரே.

விருத்தம்.

ஓடினர் யானைகூட உருகினருடல் வியர்ப்ப
வாடினாதனைக்கொல்ல வகையிலராகிநின்று
தேடினர் துணையிலார்க்குத் தெய்வமே துணையென்றெண்ணி
நாடினர் பசுபதீசர் நன்மலரடிகண்மாதே.

---

ஆனந்தக்களிப்பு.

ஒருநாளும் காணுதகாக்ஷி - காண - வுற்றதர்குப்பசுபதி நீயே சாக்ஷி
தறுகண்யானைகையோச்சி நான் தந்தமலரைப்பறித் தெறிந்ததே ச்சி

உனக்கென்று மலர்கொணர்ந்தேனே - நான்
ஒன்றிலும் தப்பிதம்செய்தறியேனே.
கனற்குன்றமாய் வளர்ந்தோனே இந்தக்
காரணம்வாய்த்ததற் கென்செய்குவேனே.
முப்புரமெரித்த முக்கண்ணு இங்கு
முறையிடுமேழை யைக்காத்திட நண்ணு
தப்புறமிருந்திடவொண்ணு தைய
அரகரபசுபதியே அந்தி வண்ணு.

---

விருத்தம்.

அன்றுமாரனை யெரித்தகனற்கண்ணை வேண்டிலேனையாநின் முன் - சென்றவாரணமுறித் தகாமலரை விரும்பிலேன் றிரிபுரத்தோர் - கன்றநாரண நாமத்தாலெய்த பகழிதாக்கருத்திற் கொள்ளேன் - இன்று வாரணமெய்ய நமன்பட்டபதமலரை யிச்சித்தேனே.

கீர்த்தனம்.

இராகம், பியாகடை. தாளம். சாப்பு.

ஏழைக்கிரங்கிவாராய் இன்னேரமின்னருள்தாராய்.

அநுபல்லவி.

வாழைகமுகஞ்சோலைசூழ வாழுங்கருவூரோய்கண்பாராய் ()

சரணம்.

உனது தொண்டருக்குள்ளே நானொருவனல்லவோ எனக்
குவந்தருள்புரிவாயென்றடிக்கடியேன் சொல்லவோ
மனதுவல்லையோ வங்கொருவார்த்தை சொல்லக்கோபமோ
வருந்த வருந்த வருமமோ என்வள்ளலுக்கிது தருமமோ.

விருத்தம்.

நச்சரவிற்கொடியவனோநஞ்சினிலும் கடுவுளனோ நன்மலர்க்கை வைக்சமழுப்படையினிலு மெரிகுணத்தில் வல்லவனோ வரதா நின்பால்-நைச்சமனமுடையவன்மே லேன்கிருபைசெயவில்லை சாற்றுயென்றும் - பச்சைமயிலுமைபாகாவிடைவாகா திருக் கருணைபாராய் வாராய்.

கீர்த்தனம்.

இராகம் - எதுகுலகாம்போதி - தாளம் ஆதி.

கண்ணிகள்

அந்தோவினையேனழுகண்ணீரோ ராறுப்பெருகியும்வாராதே
சிந்தாகுலமும்தீராதே நீ செய்வது நியாயமோபசுபதியே

தாழாவினையேன்றருமாமலரைச் சதிசெய்வாரணமேற்கிருபை
வாழாதிருப்பதுதகுமோ தகுமோ வாராய்வாராய் பசுபதியே.
வேதன்காணுமுடியாய்இலைமேல்விமலன் காணுவடியாய் நெடி
[யோய்
குதொன்றறியாச்சிறியேனிடரைத் தொலைப்பாய் தொலைப்பா
[ய்பசுபதியே.
அஞ்சா நெஞ்சத்தவனு யிவ்வூர் அரசன் விட்டமதக்களிறுல்
நெஞ்சம் புண்ணுய் நொநதேன் நொந்தேன் நேராய் நேராய்
[பசுபதியே.

விருத்தம்.

கண்கொடுக்க வேடனல்லேன் கடிமணந்த கன்னிதரமணமில்லேன் கடவுள்வைகைத் - தண்தடுக்கப்பரிசளிக்கும் வந்தியல்லேன் தலைமகனைச்சமைத்துதவததக்கோனல்லேன் பண்கொடுக்குமறைபாடும் பார்ப்பானென்று பகவ நீயருள்சுரந்துபாராயாகில் எண்கொடுக்குமலர் போனவின்று பூசைக்கென் செய்வேனென் செய்வே னென் செய்வேனே.

கீர்த்தனம்.

இராகம், கானடா. தாளம், ஆதி.

பல்லவி

தேவசங்கரனே மஹா தேவசங்கரனே

அநுபல்லவி.

தேவசங்கரனே சிவனே சிவதாவரந்தருவாரிதியே
பூவருந்திருமாலயனுந்துதியே வழங்குபாராபரனே (தே)

சரணம்.

பாலசந்திரசேகரனே கடலாலமுண்டகிருபாகரனே
நீலகண்டநிரந்தரனே வருகாலகாலனேசுந்தரனே (தே)

வாரணத்துரிபோர்த்தவனேசக காரணத்தவனே தவனே
ஆரணத்துறைமேலவனே பரிபூரணத்திலும் பூரணனே (தே)

விருத்தம்.

இனம்பிரிந்த மான்போலத் தனியே நின்று எங்குகின்றவேழை
யின் மீதேனின்னேரம் - மனம்பிரிந்ததையோ சொல்வா
யையா மானுடையாய் மழுவிடையாய்மலர்பறித்துத் - தினம்பு
ரிந்ததிருத்தொண்டிற் குற்றமொன்றும் செய்தறியேன் செய்
தோரைச்சேர்ந்தேனல்லேன் - கனம்புரிந்துபூசையின்று தாழ்
க்காதென்னைக்காத்திடுவா யாநிலைவாழ்கருணைத்தேவே.

( இ. ந க. )

தந்தாய் சிவதா தாயே சிவதா தனிமுதலேசிவதா சிவதா
வந்தாள் சிவதா மருவார்கொன்றை மலர்முடியாய் சிவதா

கீர்த்தனம். சிவதா.

இராகம், ஆனந்தபைரவி. தாளம், ஆதி. கண்ணிகள்.

மனதார மலர்பறித்துக் கொண்டுவந்தேனே
வழிமறித்தேபாவியானை சிந்தநொந்தேனே
தனதா நின்றண்மலர்க்குச் சாற்றவந்தேனே
தருகண்யானை சிந்தமனம் தளர்ந்துநொந்தேனே (ம)

ஐயநின்றன்தொண்டனன்றோ ஆரூரா சம்போ
ஆதரிப்பாராருமின்றி யலைகிறேனிப்போ
வையமெல்லாம் புகழ்படைத்த வஞ்சிவனத்தனே
மாலயனுநியர்கள் தேடும் மலர்பதத்தனே. (ம)

ஆடரவைப்பூடணமா யணிந்தமெய்யனே
அன்பனெனைக்கைவிடாமலாள்வாயையனே
வாடுமெனியோற்குதவ வரலாகாதோ
மங்கைபாகாயிந்தவேளை வருமம் தானேதோ.

விருத்தம்.

நஞ்சுடைய கடலொலியினாலோ வெண்ணி நாடிய கங்கையினார்
வத்தாலோ வந்நாள் - ஆஞ்சிறு முப்புரத்தோர்களிரைச்ச
லாலோ தும்புருநாரதர் பாடுங்கீதத்தாலோ - அஞ்சலிசெய்
தொண்டரிடுமரவத்தாலோ ஐயவுந்தன் காதுசெவிடாகியின்று
கெஞ்சுகின்ற வேழைகுரல் நின்செவிக்குக் கேட்காமற் போச்
சுதோகிளத்துவாயே.

---

விருத்தம்.

அம்பலத்திலாடியபாதா லலுத்திட்டாயோ அவுணரொடுசமர்
செய்து சலித்திட்டாயோ - செம்பதுமமுகப்பாவையிடத்திற்
றாக சென்றதினுற சோர்ந்தாயோ தென்னவர்கோன் - வம்ப
டியிலிளைத்தாயோ வானோன்மைந்தன் வாங்குவில்லானொந்தா
யோ வாராயென்று - நம்புமெளியேன் கூவவிடத்தைவிட்டு
நகராமலிருப்பதுவுநியாயந்தானோ.

---

(இ. ந. க.)

என்றேறியபுகழ் சிவனடியாரங்கிடு கூக்குரல்கொண்டொரு
தூதன்
சென்றேறியபுகழெறிபத்தர் தஞ்செவியிற் சொல்லியதே
யென்ன
அன்றேறியவக்கணமே வாள்கொண்டங்கிடர் செய்பவர்
களைந்நரே
கொண்டேறியபுகழ்படைக்கும் தொழிலர் குதிகுதித்தோடி
வந்தனரே.

---

கீர்த்தனம்.

இராகம், இந்துஸ்தான் காப்பி. தாளம், சாப்பு.

பல்லவி.

அஞ்சேலஞ்சேலைய நெஞ்சந் தடுமாறி யாகம் நோகா
தீரிங்கடியேன் வந்தேன் வந்தேன்

அநுபல்லவி.

செஞ்சேவடிசரணஞ் சரணமிடர் செய்தவராரையா செப்பிடு
வீரையா. (அஞ்)

சரணம்.

மன்னரிழைத்ததோ மற்றவரிலெவரின்னல் விளைத்தாரோ
இன்னதென்றேழைக்குச்
சொன்னவுடனே மழுக்கொண்டவர்தலை தூக்கிடுவேனுயிர்
போக்கிடுவேனையா. (அஞ்)

---

(இ. ந. க.)

இத்தகவாப்பெருவாளெறிபத்தரியம்பிய மொழியைக்கேட்ட
[வுமே
சித்தமுறுங்கலி தீர்ந்தாரெனவே செப்பிடுவாரவரப்பொழுதே
வித்தகனெங்கோன் ஆநிலைநாதன் விரிமலரடிகட்கேநிதமும்
புத்தியுடன் கொணரும் நறைமலரைப் பாராண்டருளும் புகழ்
[ச்சோழன்
பட்டமதக்களிறுக்கிரமாகவே பாகர்களுடனே வந்தென்னைத்
தொட்டுமலர் சிந்திப்போயதுபின் தொடர்ந்தேனதனுடன்
[தொலைதூரம்

நெட்டணையோ மலையோ பெருவரையோ நீண்டிடுகால்கள்
பூணைக்கதென
வெட்டெனமானே மனமோவென்று விரைந்தோடியதென்
செய்வேனே.

விருத்தம்.

பாயிரமறைகட் கெட்டாப்பண்ணவன் பதமலர்க்குத்
தாயவனெடுத்துவந்த சுதைதருபூக்கடன்னை
மாயிருஞாலங்காக்குமன்னவன்கரியோ சிந்திப்
போயது வென்னசெந்தீப் பொறியெழக்கண் சிவந்தார்.

---

கீர்த்தனம்.

இராகம், முகாரி. தாளம்; சாப்பு.

பல்லவி.

காட்டில் திரியுமிந்த யானையா மலர் சிந்திப்போவது

அநுபல்லவி.

நாட்டிற்றிரியும் மன்னனிடும நல்லுணவால் உடல்கொழுத்து
மேட்டியென்று மனநினைந்துமேவுந்திறனை யானறியேனே ()

சரணம்.

தானேதன்தலையில் மண்ணைத்தட்டிப் போடும்புத்தியினால்
வானேயெனும்வாயிலுமண் வந்துவிழத்தேடிகொண்டது ()

---

விருத்தம்.

மாரனையெரித்தபோதும் மறலியையுதைத்தபோதும்
காரணமதில்கள் மூன்றும் கனலெழச்செய்தபோதும்
நீரணிசடையினற்கு நேர்ந்தவெங்கோபச்செந்தீ
யோருருவாகிப் பத்தருருவெடுத் தென்ன நின்றார்

ஊழியினெழுந்ததீயோ உக்கிரனுருவந்தானோ
ஆழியினெழுந்த ஆலகாலமோ அரசன்விட்ட
தாழியின்வயிற்றியானை தன்னுயிர்போக்கவிந்த
நாழிகைதனிலுதித்த நமனெனும் வடிவந்தானோ.

(இ. ந. க.)

என்றென்றங்கங்கிருந்தமாந்தர் இன்னணமோ தவ்வெறிபத்தர்
கன்னெஞ்சினராய் யானையின்பின்னே கடிதேகிக்கொண்டிது
[சொல்வார்.

கீர்த்தனம்.

இராகம், தன்னியாசி. தாளம், ஆதி.

கண்ணிகள்.

ஓடுகின்றமதகரியே உன்வலியுமென்வலியும்
ஆடுகின்றவமரிலே கண்டறிகுவோம் நில்லாய்
வாடுகின்ற மாமறையோன் மலர்சிந்தியகரவலியும்
நாடுமென்கைவாள் வலியும் நனிகாண்போம் நில்லாய்
உனைவளர்க்குமன் வலியும் ஓட்டுகின்றபேர்வலியும்
இனமறியக்கண்டிடுவோம் ஏகாதே நில்லாய்

---

கீர்த்தனம்.

இராகம், பூரிகல்யாணி. தாளம், ஆதி.

பல்லவி.

நில்லு நில்லு மதகரியே இது
நேர்மையாமோ மதகரியே.

அநுபல்லவி.

சொல்லு மாதவன் கொணர்ந்தநா மலரைத்
தூற்றிச்சிந்தியதி லேற்றமாமோசற்று (நி)

சரணம்.

நால்வகைப் படையிலோரினத்தனாய்
நடுவணின்று சமர்பொருது நீ
கால்வருந்தமறையவனுக்கஞ்சி வெரிந்
காட்டியோடுவது மேட்டியாமோசற்று (நி)

விருத்தம்.

காற்றினுங் கடிதினேகுங் கடகரியதனைக் கொல்லுங்
கூற்றெனக்கைவாளேந்திக் கொண்டெறிபத்தரேகி
நாற்றிசை யெங்குங் கீர்த்தி நண்ணிடத்துதிக்கைபற்றி
யாற்றொணுச்சினத்தீமூளவதஞ்செய்தாரதஞ்செய்தாரே.

கீர்த்தனம்.

இராகம், செஞ்சுருட்டி. தாளம், ஆதி.

பல்லவி.

யானையைத் தடிந்தார் பெருவாளெறி பத்தர்

அநுபல்லவி.

மானையேந்தியகரத்தர் மலரடிமறவாச் சித்தர் (யானை)

சரணம்.

கோடையிடிபோலவது
கூச்சலிட்டலறக் கடல்
தேடியோடியது வெள்ளச்
செங்குருதி வட வரை
நாடி வேரறுந்து வீழ்ந்த
தோவெனவிழுந்ததனை
நாடினவரச்சங்கொடு
வாடியே யுடல் நடுங்க. (யானை)

விருத்தம்.

கோடையிடி யெனவலறியானை வீழக்
கொண்டசின மாறாதுபாகரோடும்
கூடவருமிருவரையுந் தடிந்து வீழ்த்திக்
குவலயத்தி லிழந்தவர்களை படைத்தாற்போல.

ஆடிநின்றா ரானந்தக் கடலிலாழ்ந்தார்
அங்குநின்றாரின்னமு மென்னமோவென்று
வாடியவரவர் வாயில வந்தவெல்லாம்
வழங்குவார்மனநொந்து புழுங்குவாரே

கீர்த்தனம்.

இராகம், சாமா. தாளம், சாப்பு.

கண்ணிகள்

ஒருநாளுங் காணாத விபரீதங்களைக் காண
வுற்றதேனின்றென்பார் சிலபேர்கள்
தாரையாளுமன்னவன் தலையானை பட்டதே
தன்னங்கக் குறையென்பார் சிலபேர்கள்

பாராதபரிதாபம் பார்த்திடக்கண்கள் செய்
பாவந்தானோவென்பார் சிலபேர்கள்
வாராதபெரும்வசை வந்ததே யிவ்வூர்செய்
பாபவமேதென்பார் சிலபேர்கள்.

கொல்லாமை யறமெனவறியாத குணக்கேடன்
கொண்டானோவாளென்பார் சிலபேர்கள்
எல்லாருங் கூடிநாமிவனைப் பிடித்துச் செல்வோம்
இந்தல் முன்னே யென்பார் சிலபேர்கள்.

விருத்தம்.

மடியாத வரம்பெற்ற மார்க்கண்டனேயோவிம் மறையோனென்பார் - படிமீதுவிழுந்திறந்த நமனையோவிப்பகபொரீரென்பார் - அடியார்க்குவருமிடரைத் தீர்த்தாளுந் திருக்கடவூரானே யிந்த - விடமேனியெறிபத்தத் திருவுருவம் படைத்தானோ இயம்புகென்பார்.

முத்தகவெண்குடையரசு முனியாது விடுக்கினு நம்முக்கணெம்மான் - கைத்தலவெம்மழுவேனுங்கட்கனலேனும் மிவனைக்காயாமற்றான் - வைத்திடுமோ வைத்தாலும் வாரணகம் விடுத்திடுமோவாய்மையில்லாப் - பொய்த்தமனக் கள்வனந்தோ கொலைத்தொழிற்கேயிவ்வேடம் பூண்டானென்பார்.

சொல்லாருஞ் சிவனடியார் கொலைத்தொழிலும் புரிவரோ சொல்லீரென்பார் - வல்லானைபுவியரசன் மதக்களிறும் பாகர்களுமாண்டதற்குக் - கொல்லாது விடுவனோ விட்டாலுஞ் செங்கோற்குக் குற்றமென்பார் - அல்லாமலிவன் வினைதானெப்படியோ யாமொன்றுமறியோமென்பார்.

(இ. ந. க.)

அந்நகரத்தவர் பல்லோரும்
அவரவர்வாயில் வந்தவெலாம்
சொன்னயமென்பது யாராதே
தூடணைபூடணை செய்காலை.

ஒற்றலரிற் சிலரரசனிடம்
உற்றதுரைக்கச்சென்றனர்கள்
மற்றவரிற்சிலர் பாகர்களின்
மனைகளிலேசென்றேகினர்கள்.

ஓதிய சொற்கேட்டுப் பாகர்
ஒண்டொடியார்கள் மனநொந்து
ஓதியவிழ்ந்திடவே யோடி
ஓலமிடும் வகையென்னென்பேன்.

கீர்த்தனம்.

இராகம், காம்போதி. தாளம், சாப்பு,

பல்லவி.

ஆவிதியே இந்த வினைக்காளாக்கினையே

அநுபல்லவி.

பாவியிவனெல்லாரும் பரிதவிக்கச்செய்தனையே

சரணம்.

சுட்டிகட்டிப் பொட்டுமிட்டுச் சுரிகுழலில் மலர் முடித்து
தொட்டகணவனுடன் கூடிச் சுகியாமற்செய்தனையே (ஆவி)
திருவிழந்து மருவிழந்து தீராதவிதனங்கொண்டு
தெருவிழுந்து கதறியழச் செய்தாயே செய்தாயே (ஆவி)

விருத்தம்.

மண்படைத்தமலரவனே யாங்களுந்தன்மக்களன்றோ இந்த வினைவந்து நொந்து - புண்படைத்த மனத்தினராயிருந்து வாழப் புரிந்திட்டதழகாமோ புகலாயோரண் - கண்படைத்து மென்னபயன்கண்டோரேசுங் கன்மனத்தாய் நின் குணத்தைக்கண்டேயன்றோ - எண்படைத்த பொற்கோயிலியற்றி வைத்து ஏத்தரமவிருக்கின்றாரின்னந்தானே.

(இ. ந. க.)

என்றென்றிங்ஙனமின்னை நிகழ
வேங்கியவொற்றர்களரசனிடம்
சென்றங்க நிலந்தோய விழுந்து
சிரமேற்கைகுவித்தே நின்று.

பொன்றங்கும் முடியோவெம்மரசே
பொருளையிலாடி வரப்போன
குன்றம்பெனுநின் பட்டத்து மதக்
கோட்டானையையும் பாகரையும்.

கொன்றுனொருவன் காரணமறியோம்
கோமகனே யென்றோதிடவும்
கன்றுமன்னன் கட்கனல் சிந்தக்
கரிபரித்தேரும் காலாளும்

முன்னே பலவும் பின்னே பலவும்
முதுகடலோ வெனவே செலவும்
என்னே யென்னே யிக்கூத்தென்னே
யென்றெல்லோருமியம்பிடவும்.

நல்லவயப்பரிமீதேறி
நாடாளும்பெரும்புகழ்ச் சோழன்
அல்லல்வினை தீர்த்திடவருவா
னவன்போல்வந்தான் கொலைக்களமே.

விருத்தம்.

எழுகடலும் பொங்கியதோ வில்வூருக்கின் றெவ்வரசன் படையெடுத்து வந்திட்டானோ - பழுதிலாசானு நம்வளவனுர்க்குப் பகையுமுண்டோவெனப்பலரும் பகரக்காதிற் - குழையசைய நவமணியாபரணமின்னக் குனிசிலையுங்கூர்வாளுங் காத்திற்றங்க - மழைமுகிலின் குமுறலென முரசமார்ப்ப வந்திட்டான் புகழ்ச்சோழமன்னன்றானே.

கீர்த்தனம்.

இராகம், பரசு. தாளம், ஆதி.

பல்லவி

மன்னாதி மன்னன் புகழ்ச் சோழமார்த்தாண்டன் வந்தானெ
[றிபத்தர் முன்.

அநுபல்லவி.

கன்னாதியர்தோற்குமீகையங்கையன் கடுக்கைடங்கண்ணி
[சூடிக்கன் பரந்துய்யன்.

சரணம்.

தன் சேனைமுற்செல்லத் தார்வேந்தர்பிற்செல்ல
எந்நாளும் வாராத இடர்வந்ததேயென்ன (மன்)

( இ. ந. க. )

வாயுவேக மனோவேகம்மென
வந்தமன்னவன் கண்முன்னே
காயுமாற்றலரில்லாததனைக்
கண்டான் கரியும் பாகர்களும்.

மாண்டிருப்பது நோக்கினனெவ்வழி
மீண்டு சென்றனர் பற்றலரென்னலும்
ஆண்டகைத்திருமலரடிமேற்றொழு
தீண்டபாகரியப்பினருண்மையை.

---

கீர்த்தனம்.

இராகம், பூரிகல்யாணி. தாளம், ஆதி.

பல்லவி.

சொல்லக்கேளுமையா புகழ்ச் சோழராஜனே

அநுபல்லவி.

வெல்லும்பகைவரிங்கொருவரும்
மேவிவந்தாரில்லை யில்லை (சொ)

சரணம்.

நீறுபூத்த நெருப்புப்போல நேரில் நிற்கும் வாளரிந்த
வாறுசெய்தனரேயன்றி மற்றையாரும் செய்தாரில்லை (சொ)

---

(இ. ந. க.)

பாகர்களோதிய சொற்கேட்டுப்
பாராண்டருளும் புகழ்ச் சோழன்
ஆகநடுங்கக் குதிரையிழிந்
தரவக்குழையோனன்பரலால்.

துணியாரிக்காரியஞ் செய்யார்
தூயவரிவரென்றே நினைந்தான்
தணிவீரென்றுன்றன் படையைத்
தாழ்ந்தானடியவரடிமீதில்.

---

கீர்த்தனம்.

இராகம், பியாகடை. தாளம் ஆதி.

பல்லவி.

வந்தனம் வந்தனம் வந்தனம் வந்தனம் உங்கள்
மலரடியிணைக்கு வந்தனம்

அநுபல்லவி

இந்நாளென்னிடர் வந்ததோ வேழையேன்
சிந்தைநோய்தீரநீர் செய்புவீரையரே (வந்த)

சரணம்.

யானையென் செய்யினும் அங்கதன்மேலேறிவந்த
சேனையென் செய்யினும் செப்பொணாத விக்கொடுமை
வினையாசெய்திட்டீர் எம்பெருமானடியவர்
தானிதோசெய்குவார் தக்கதோமிக்கதோ. (வந்த)

(இ. ந. க.)

ஐயா நீ கேள் சிவகாமி
யாண்டாரென்றிடுமாமறையோன்
நெய்யாறாய் வருமாமலரை
நிமலன்பாதயுகங்களின் மேல்.
சூடத்தந்தான் குடலைகளில்
, துற்குணமேற்கொண்டிப்பகடு
சாடிக்கையாற்பறித்தெரியத்
தாழானாகித்தான் செப்ப.
அப்பகடைக்கொன்றேன்பாகர்
அடக்கமுயலுந்தொழிலிலராய்
தப்புச்செய்தாரிறுமாந்து
தடிந்தேனவர்களைதப்பாமோ.
என்றார் வடிவாளெறிபத்தர்
இவர்தானென்றவரடிதாழ்ந்து
மன்றன்மலரைச்சிதைத்தெறிந்த
மால்யானையையும் பாகரையும்.
கொன்றீரோனுஞ்சிவாபராதம்
கொடியேனைச்சேர்ந்ததினாலே
என்றலைதுணிப்பீரிக்களத்திடையே
என்றான் புகழோங்கிய சோழன்

விருத்தம்.

மன்னவன் குடையினீழல் வாழ்ந்திடு முயிர்கள்செய்யு
மின்னலால் விளையும்பாவ மேந்தலைச் சேருமென்று
முன்னவர் மொழிந்தவாய்மை முரணுமோ யானைசெய்த
வின்னலுக் கிலக்கியானே யென்றலை துணித்திடீரே.

கீர்த்தனம்.

இராகம், சஹானா தாளம், ஆதி.

பல்லவி.

என்றலைகொய்வீ ரிப்பழி தீர்ப்பீர்
ஏழைக்கிது செய்வீர்

அநுபல்லவி.

கொன்றையந்தொடைப் பண்ணவனுக்காக்
கொண்டுவந்த மலர் சிந்தியதற்காக (என்ற)

சரணம்.

தீராத்தீவினை தீறத்தீமை தீவிரமா யோட
நீரார்புவியில் தம்பெரும்புகழ் நிலைக்கவண்டம் பழிக்கு
முன்னம் (என்ற)

விருத்தம்.

ஐயநின் வாளாற்கொய்ய வருந்தவ மெனதுசென்னி
செய்யிலை யேழைகையிற் சிக்கிய வாளைக்கொண்டு
பய்யவே தலைதுணிப்பீ ரென்னலும் பகவன்றொண்டர்
கையினால் வாங்கிக்கொண்டார் காவலன் கருத்தறிந்தார்.

(இ. ந. க.)

இத்தகவாகப் புகழ்ச்சோழன் இரந்துதந்தான் கைவாளைப்
பத்தருங்கொண்டார் பார்மன்னன் பணிந்தானெழுந்தான்
[குதிகொண்டான்

கீர்த்தனம்.

இராகம், கானடா. தாளம், சாப்பு.

பல்லவி.

யான்செய் தவமின்று பலித்ததே எனை
யடர்ந்தபாவங்கள் விடுத்ததே.

அநுபல்லவி.

தேன்பெய்மலர்கரி சிந்தியது முன்
செய்த தவமேயன்றி வேறில்லை (யான்)

சரணம்.

மங்கைபாகனதடி மறந்து பொய் வாழ்வைநம்பியபாவமும்
மட்டறும்பழிகூறுமிப்பெரு மண்சுமத்தியபாவமும்
செங்கைவாள்கொடென் சிரந்துணித்திடில் தீருமென்றிவர்
[கையின் மேல்
இட்டமாகவேதந்திட்டேன்பல நீட்டுக்கொருமுழுக்கெனத்
[துணிந்திட்டேன் (யான்)

---

(இ. ந. க.)

தன்பாகரையும் யானையையும் தடிந்ததற்காக நோகாமல்
என்றலை துணிப்பீரென்றுடைவா ளீய்ந்தானிவன்போலெரிகிறோன்
குலத்துதித்தாரிலரென்றே கூர்வாளெறிபத்தர்தேர்ந்து
அலக்கணுற்றாரென்செய்தேன் அந்தோகெட்டேனென் செய்கேன்
என்செய்வேனினியென்செய்வே னிப்பூவுலகத்தவரெல்லாம்
என்செய்தானென்றேசுமொழி ஏந்திக்கொண்டேனென்செய்கேன்
இப்படிபழியைக்கைப்படுவானா லென்றலைதன்னைத்துணித்திடா
தொப்பனையாகா வசையும்போகா துலகந்தனிலென்றெறிபத்தர்
மைப்புடிகண்டன் மலரடிநெஞ்சில் வைத்தவராகித் தன்வாளைக்
கைப்படவேந்தித் தன்களமரிவது கருமந்தானென்ன் றுட்கொண்டார்.

கீர்த்தனம்.

இராகம், காம்போதி. அடதாளம்,

பல்லவி.

ஏழைமையாற் செய்தபாவம் ஏழைமையால் தீர்வதல்லால்
எவர்தீர்க்கிடவரினுந்தீருமோ.

அநுபல்லவி.

வாழைபடிவாழையென வருமல்லாலிந்தப்பழி
தாழ்வுறுமோ சனனமரணம் தானனுகாதே போகுமோ

சரணம்.

பல்லுயிருங்காக்குமிந்தப் பார்த்திபனே தன்னுயிரை
வல்லுயிராயெண்ணவில்லை வாள்கொடுத்தான் தன்னுயிர்க்கு
கல்லுயிரோவென்னுயிர்தான் கற்கண்டோசருக்கரையோ
நல்லுயிரோநாறுமுடல் நாடிநிற்குமிவ்வுயிரால் (ஏழை)

(இ. ந. க.)

என்றென்றிவ்வா றெறிபத்தர் எண்ணிக்கொண்டிடைவா ளோங்கப்
பொன்றங்கும் முடிபுகழ்ச்சோழன் பூரித்தாகந்தங்கொண்டு.

ஐயாபுநிதன் நானேனென் அறிவாளாவென்றலைகொய்வீர்
மெய்யாவென்றனவாடிமேல் வீழ்ந்தானெழுந்தான் வேல்வேந்தன்.

குனிந்துநின்றான் நெடுநேரம் கூர்வாளவனது களந்தன்னைத்
துனைந்திடாதது கண்டுசிரம் தூக்கிப்பார்த்தான் புவியன்னன்.

பார்க்கப்பகவன் றொண்டர்கைப் பற்றியவாளவர்களமீதில்
சேர்க்கக்கண்டான் மெய்சோர்ந்தான் தெருண்டான் மருண்டான்செப்பிடுவான்.

கீர்த்தனம்.

இராகம், பியாகடை. தாளம், ஆதி.

பல்லவி.

நில்லும் நில்லும் நில்லுமையா
நினைத்ததென்ன சொல்லுமையா.

அநுபல்லவி.

அல்லல்வினை தீருமையா
அடியேனைக் கண்பாருமையா

சரணம்.

என்னைநத்திவரும் பழிக்கு என்றலையேயதற்கிலக்கு
தன்னைநத்திடாப் பழிக்கேன் றலைகொடுக்க நீர்துணிந்தீர்.

கீர்த்தனம்.

இராகம், கமாஸ். தாளம், ஆதி.

பல்லவி.

என்னசெய்யத் துணிந்திட்டீரையா
என்னன்பின் மெய்யா.

அநுபல்லவி.

என்னசெய்யத் துணிந்துவிட்டீர்
ஏழையெந்தன் கையைவிட்டீர்
சொன்னசொல்லை மறந்திட்டீரையா
துணைவாட்கையா.

சரணம்.

நான்கொடுத்த வாளுங்கொண்டீர்
நற்குணத்தை யேன்மறந்தீர்
தேன்கொடுக்கும் மொழிபகர்ந்திட்டீர்
செய்யாதுவிட்டீர்.

(இ - ந - க.)

ஆறாய்க் கண்ணீர் பெருகக்கோன் அன்பர்கையைப்பிடித்திட [லும்
மாறாக்குணராய் வன்றொண்டர் மன்னன் கையை விலக்கிட [லும்

தன்னைச்சார்ந்தது பழியென்றே தணிந்தீர்ப்பான் மன்னவன் [வாளை
என்னைச்சார்ந்த தெனச்சொல்லி யீர்திழுப்பா ரெறிபத்தர்.

விருத்தம்.

பத்தர்கைவாளாரீர்ப்பப் பகவன்றொண்டர்
பார்மன்னன் கைவாளைப் பற்றாதீர்ப்ப
இத்தகவா றெடுநேர மீர்ப்பவீர்ப்ப
ஈசன்மலரடிப் போதிலிசையநாளும்
வைத்தமனத்தினர்க் குற்ற வழக்கைத்தீர்க்க
வல்லவரா ரவரன்றி மக்களுள்ளே
எத்தகையபோராலு மாகாவாகா
வென்செய்வார் சுற்றிநின்றா ரென்செய்வாரே.

---

( இ. ந. க. )

தொண்டரும் சோழனுமிவ்வாறாய்த்
தோற்காராகி யுறுங்காலை

எண்டிசை கேட்டிடவிண்வாணி
இயம்பிய தொருமாற்றங் கேண்மோ.

கீர்த்தனம்.

இராகம், மோகனம். தாளம், சாப்பு.

பல்லவி.

நிறுத்தும் நிறுத்தும் வாள்மன்றாட்டம்
நிகழ்ந்துபோதும்.

அநுபல்லவி.

பொறுத்துக்கொள்ளும் நான்சொல்லும்
பொய்யாமொழியை மெய்யாக்கொள்ளும் (நிறு)

சரணம்.

உங்கள்பத்தியுலகறிந்திட
ஓங்குநல்லறம் தழைத்தோங்கிடத்
திங்கள் சூடி யிறைவன்செய்த
திருவிளையாடல் புகழெழ (நிறு)

(இ. ந. க.)

அன்பர்காளும தன்புலகம் அறிதற்காகவே சிவபெருமான் தன்றிருவிளையாடல்செய்தான் றணிவீரென்றுமறைந்திடலும் யானையெழுந்தது பாகரெழுந்தனர் அச்சிவகாமியாண்டார்கை தானுறுகுடலைகள்மலர்கணிறைந்தன தற்பரனருளென்னென்
[பேனே

கவிக்கூற்று.

கீர்த்தனம்.

இராகம் - பிலஹரி, தாளம் - சாபு.

பல்லவி.

என்னசொல்வே னிந்தக்காக்ஷி
யெங்கும் கண்டறியேன்

அநுபல்லவி.

கன்னல் கமுகஞ் சோலைசூழும்
கருவூர்செய்த பாக்கியந்தான் (என்ன)

சரணம்.

மரித்தபாக ருயிர்த்தெழுந்ததும்
மாண்டயானை பிழைத்து வந்ததும்
விரித்துவான முரைத்த கன்றதும்
விரிமலர்க் குடலைக ணிறைந்ததும். (என்ன)

---

(இ. ந. க.)

பூமழை பெய்தார் துந்துபியார்த்தார்
புரம்தான் முதற்றேவர்கள்

மாமறை சொல்லியே வாழ்த்தினர் பூசுரர்
மன்னர்கள் ஜயஜயவென மொழிந்தார்.

மதுமலர் கொண்டம் மறையோனும்
வாளெறிபத்தர் தமைப்பாவி

விதுவளர் மௌலிப்புனிதன்றாள்
மேவச்சென்றான் பொற்கோயில்

மகிமன்னன் பதயுகங்களின்மேல்
வாளெறிபத்தர் வணங்கிட்டுப்

புகழுனதே யென்றானரசன்
போற்றிச் சொன்னா னுமதென்றே.

கீர்த்தனம்.

இராகம் - கமாஸ், தாளம் - ஆதி.

பல்லவி.

உம்மாலிந்தப் பெரும்பாக்கியம்
உற்றதே யெறிபத்தரே.

அநுபல்லவி.

கைம்மாவொடு பாகராருயிர்
களைந்ததாலிது விளைந்ததல்லவோ (உம்மா)

சரணம்.

விண்டலத்தினில் மொழிபிறந்ததும்
வீந்தவுடலிலுயிர் நிறைந்ததும்
வண்டார்மலர் சிந்திப்போனது
மறையவர்காம் மருவிவந்ததும் (உம்மா)

(இ. ந. க.)

உத்தமபத்தர்க ளிவ்வாறாய்
ஒருவரை யொருவர் புகழ்ந்தாடி
அத்தன் றிருவரு ளல்லாமல்
ஆமோவென்றவ னடிதாழ்ந்தார்.

கீர்த்தனம்.

இராகம் - பரசு, தாளம் - ஆதி.

கண்ணிகள்.

தேவாதி தேவனே சம்போ சங்கரனே
சிரித்து முப்புர மெரித்து நஞ்சுண்டு
கறுத்த கந்தரனே. (தேவா)

பூவாழயன் காணாத புரத்தனே யுயர்சிரத்தனே
பூரித் தெங்களிடர் தீரத் திருவருள்
சாரத் தருந்தவனே. (தேவா)

காரானையுரித்துப்போர்த்த காத்தனே கந்தரத்தனே
கலக்கமுற்றவ ரலக்கணைத்தூர
விலக்கிடும் பரனே. (தேவா)

---

(இ. ந. க.)

மன்னனும் பத்தரு மிவ்வாறுப்
வானவன் மலரடி வாழ்த்தியபின்
நின்னில மேகினெறிபத்தர்
நிகழ்த்தப் பிரியா நெஞ்சினராய்
பட்ட மதக்களி றேறெழுந்த
பாகரும் மன்னருந் தற்சூழ
எட்டுத்திக்கும் புகழெய்த
இல்லஞ்சென்றான் புகழ்ச்சோழன்.

அடியார்க்குறு மிடர் தீர்ப்பாராய்
ஆநிலைநாதன் பணியொன்றே
யுடையாராய்ப் பின்னெறிபத்தர்
உற்றார் கணங்களுக் கதிபதியாய்
கருவூரானைக் கைதொழுவார்
கருவூறாக் கண்ணுதலும்
தருவூராதுவே தகுமோ
தருவூராமோ தகுமோ.

---

கீர்த்தனம்.

இராகம் - சுருட்டி, தாளம் - சாபு.

பல்லவி.

மங்களம் மங்களம் மங்களம் மாதேவருக்கு
மங்களம் மங்களம் மங்களம்.

அநுபல்லவி.

அங்கயற்கட் சுந்தரியணைந்த தோழருக்கு மெழில்
தங்குமலங்கார வல்லி சாரவரம் தந்தவர்க்கு (மங்)

சரணம்.

தும்பிமுகன்றந்தையருக்கு அறுமுகனைத் தோற்றுவித்த [வெந்தையருக்கு
வெம்பிய நஞ்சுண்டவருக்கு வாகனமாக வெள்ளைவிடைகொண் [டவருக்கு
அம்பிகையோர் பங்கருக்கு அரவணியும் துங்கருக்கு
உம்பர்தொழும் பாதருக்கு உலகநிறை நாதருக்கு (மங்)
மான்மழுவேந்திடுமவர்க்கு சிவகாமியாண்டார் மனமகிழ மலர் [தந்தவர்க்கு
வான்புகழ்ச் சோழனைக் காத்தார்க்கு எறிபத்தர்க்கு மாறிலாப் [பதங்கொடுத்தார்க்கு
தேனுபூசை ஏத்தவர்க்குச் செப்புமம்பலக் கூத்தருக்கு
ஞானிகள்தொழு மீசருக்கு நற்கருவூர் வாசருக்கு (மங்)

பயன்.

(இ. ந. க.)

இச்சரிதஞ் சொல்வோர் கேட்போர்
இணையிலராகிப் புவிவாழ்ந்து
அச்சுதன் காடியுமறியாதா
னவனடிமலரிணை யணைவாரே.

எறிபத்தநாயனார் சரித்திரக் கீர்த்தனை முற்றிற்று.

MAHAMAHOPADHYAYA
... ...THA IYER LIBRARY